# அம்மா எங்கே?

TAM209E1

## (ஆதாரம்: Tulika)





கிரண் தன்னுடைய அம்மாவை எங்கே என்று தேட ஆரம்பித்தான். சமையலறையில், மாடி முகப்பில், புத்தகங்களுக்கு இடையில், கட்டிலுக்கு அடியில், கணினி முன் என்று அனைத்து இடங்களிலும் பார்த்தான்.
அம்மாவின் காலனி குளிர்சாதனப்பெட்டி முன் இருப்பதைப் பார்த்தான். எல்லா பாலையும் குடித்து, எல்லா இனிப்பையும் சாப்பிட்டாதால் அவளது வாய் நிறைந்து இருக்கும். அதனால் பேசமுடியவில்லை போலும் என்று கருதினான். பின்புறம் ஏதோ சப்தம் கேட்டுத் திரும்ப…





**வகுப்பறைச் செயல்பாடு:** மாணவர்கள் தங்கள் அனுபவங்களைக் கற்பனை கலந்து விவரித்து எழுதுதல். தலைப்பு ‘என் நண்பனை (அ) நாய்குட்டியை (அ) பொம்மையைத் தேடினேன்’

உதாரணமாக,

ஒருநாள் பள்ளிக்கூடம் முடிந்து வீடுக்கு வந்தேன். “சிறிது நேரம் விளையாடிவிட்டு வருகிறேன் அம்மா” என்று சொல்லிவிட்டு என் நண்பன் கமலன் வீட்டுக்குச் சென்றேன். ஆனால் கமலன் வீட்டில் இல்லை. “அவன் இங்கு தான் எங்கேயாவது விளையாடிக் கொண்டு இருப்பான்” என்றார் அவன் அம்மா. உடனே நான் தோட்டத்திற்கு ஓடிச் சென்று பார்த்தேன். ஏனென்றால்…

(மாணவர்கள் ஏதேனும் ஒரு நபரை மையமாகக் வைத்து ஒரு கற்பனைக் கதையை எழுதலாம். கதையை மாணவர்கள் தங்கள் சொந்த நடையில் எழுதுவற்கான முழு சுதந்திரத்தையும் ஆசிரியர்கள் அளிக்க வேண்டும்)